RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING | மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-4 | 04 ஜனவரி | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## விழுப்புரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநில மாநாடு தொடங்கியது



விழுப்புரம், ஜன.4

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநில மாநாடு விழுப்புரத்தில் நேற்று (ஜனவரி 3) தொடங்கியது.

விழுப்புரத்தில் திருமண மண்டபம் ஒன்றில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் 24வது மாநில மாநாடு இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனை தொடர்ந்து மாநாட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் காரத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

மாநாட்டில் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் எம்.ஏ..பேபி, ஜி.ராமகிருஷ்ணன், பிருந்தாகாரத், மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் உ, வாசுகி, டி.கே. ரங்கராஜன், எம்.பி.க்கள் சு. வெங்கடேசன், சச்சிதானந்தம், எம் எல்ஏக்கள் நாகை மாலி, சின்னதுரை உள்ளிட்டோர் பங்கேற்று உள்ளனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர்.முத்தரசன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

இதைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு பேரணி தொடங்குகிறது.மாநில மாநாட்டையொட்டி விழுப்புரம் சென்னை சாலையிலிருந்து மாலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் பங்கேற்கும் பேரணி தொடங்குகிறது. காட்பாடி மேம்பாலம், மருத்துவமனை வீதி, நான்குமுனை சந்திப்பு, புதிய பேருந்து நிலையம் வழியாக செல்லும் பேரணி, பொதுக்கூட்டம் நடைபெறும் நகராட்சித் திடல் பகுதியை அடைகிறது.

இதைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் காரத், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் பிருந்தாகாரத், பேபி, ஜி.ராமகிருஷ்ணன் பங்கேற்று பேசுகின்றனர்.இந்த மாநாட்டில் பங்கேற்க மாநிலம் முழுவதும் இருந்து நிர்வாகிகள், மாவட்டங்களிலிருந்து கட்சியினர் பங்கேற்க உள்ளனர். இதைத் தொடர்ந்து நாளை, நாளை மறுநாள் நடைபெறும் மாநாட்டு அமர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

## அமைச்சர் துரைமுருகன் இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை!



வேலூர், ஜன.4

வேலூரில் அமைச்சர் துரைமுருகன் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்று வருகிறது. காட்பாடி காந்தி நகரில் உள்ள அமைச்சர் வீட்டில் சோதனை நடைபெற்று வருகிறது.

வேலூர் காட்பாடி காந்தி நகரில் இருக்கக்கூடிய நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் வீட்டிலும் அதே வீட்டில் வசிக்கும் கதிர் ஆனந்த் வீட்டிலும் சோதனை நடைபெற்று வருகிறது. அமைச்சர் துரைமுருகன் வீட்டில் 10க்கும் மேற்பட்ட துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு டன் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்று வருகிறது.

சுமார் 5க்கும் மேற்பட்ட வாகனத்தில் வந்த அவர்கள் 10க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் காரணமாக வீட்டில் முன்பும் திமுக தொண்டர்கள் குவிந்து வருகின்றனர்.


இதற்கு முன்பாக திமுக நிர்வாகி காட்பாடி அடுத்த பள்ளிக்குப்பம் பகுதியில் பூஞ்சோலை சீனிவாசனுக்கு தொடர்புடைய 2 இடங்களில் அதாவது சிமெண்ட் கடையுடன் இருக்கக்கூடிய வீடு மற்றும் அவர் வசித்து வந்த வீடு ஆகிய 2 இடங்களில் காலை முதல் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டனர். இவர் அமைச்சர் துரைமுருகனுக்கு நெருக்கமானவர் என கூறப்படுகிறது.

இந்நிலையில் அமைச்சர் துரைமுருகன் வீட்டில் காலை முதல் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். அவரது வீடு மட்டுமல்லாமல் அமைச்சருக்கு சொந்தமான தனியார் பொறியியல் கல்லூரியிலும் சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் இது எதுதொடர்பான சோதனை என்ற முழு விவரம் இதுவரை வெளியாக வில்லை.

ஆனால் கடந்த 2019ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது துரைமுருகனின் மகன் கதிர் ஆனந்த் போட்டியிட்டார். அப்போது வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதற்காக பள்ளிக்குப்பத்தில் பூஞ்சோலை சீனிவாசன் வீட்டில் இருந்து 11 கோடி ரூபாய் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக தேர்தல் ரத்து செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து 3 மாதங்களுக்கு பிறகு தேர்தல் நடைபெற்று அதில் கதிர் ஆனந்த் வெற்றி பெற்றார். இது தொடர்பான வழக்கு கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. அவ்வப்போது 11 கோடி பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக பூஞ்சோலை சீனிவாசனிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாகவும் இது இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## கொடைக்கானலில் உறைபனி: கருகும் பயிர்கள்; விவசாயிகள் கவலை இயல்பு வாழ்க்கை பாதிப்பு



கொடைக்கானல், ஜன.4

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் வழக்கமாக டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை உறைப் பனி காலமாக இருக்கும். இம்முறை டிசம்பர் மாதம் பரவலாக மழை பெய்ததால் உறை பனி குறைந்து அடர் பனிமூட்டம் நிலவியது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெப்பநிலை வெகுவாக குறைந்து கடும் குளிர் நிலவி வருகிறது. பகல் நேரத்தில் 10 முதல் 14 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும், இரவில் 5 முதல் 9 டிகிரி செல்சியஸிற்கும் குறைவான வெப்பநிலையும் நிலவி வருகிறது.

அதிகாலையில் புல்வெளிகள் வெண்மையாகப் பனி படர்ந்து உறைந்து கிடைக்கின்றன. கடுமையான குளிர் காரண மாக சுற்றுலா பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இந்த சூழலை மிகவும் ரசிக்கின்றனர். பிற்பகல் 3 மணி வரை இதமான வெயில் அடிக்கிறது. அதற்கு பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும் குளிர் நள்ளிரவில் உறைய வைக்கும் அளவிற்கு உள்ளது. பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் தீ முட்டி குளிர் காய்ந்து வருகின்றனர்.

இதே நிலைமை நீடித்தால் சில நாட்களில் மைனஸ் டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவும் சூழல் உள்ளது. பிரையண்ட் பூங்கா மற்றும் ரோஸ் கார்டனில் நிழல் வலையால் தாவரங்களை மூடி தோட்டக்கலை துறையினர் பாதுகாத்து வருகின்றனர். அதே சமயம், விவசாய நிலங்களில் பனிப்பொழிவால் செடிகள் கருகி வருகின்றன. அதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு 12, 000 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர், ஜன.4



மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு விநாடிக்கு 12, 000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு நீர் தேவை குறைந்ததால், நீர் திறப்பு குறைக்கப்பட்டது. இதனால் மேட்டூர் அணை நீர்மட்டம் வெகுவாக அதிகரிது வந்தது. இந்நிலையில் மேட்டூர் அணை நீர்மட்டம் முழு கொள்ளளவான 120 அடியை, ஒரே ஆண்டில் 3வது முறையாக கடந்த 31ம் தேதி எட்டியது. பின்னர், அணைக்கு வரும் நீர் அப்படியே வெளியேற்றப்பட்டது. இந்நிலையில் டெல்டா பாசனத்துக்கு நீர் தேவை அதிகரித்துள்ளால் அணையிலிருந்து நீர் திறக்கப்பட்டது.

அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நேற்று மாலை 4 மணிக்கு விநாடிக்கு 1, 500 கன அடியில் இருந்து 5, 000 கன அடியாகவும், நேற்றிரவு 8 மணிக்கு 10, 000 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் அணையிலிருந்து டெல்டாவுக்கு திறக்கப்பட்டு வரும் நீரின் அளவு இன்று காலை 8 மணி முதல் விநாடிக்கு 12, 000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கால்வாய் பாசனத்துக்கு விநாடிக்கு 300 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணைக்கு நேற்று விநாடிக்கு 1, 871 கன அடியாக நீர்வரத்து, இன்று 1, 992 கன அடியாக சற்று அதிகரித்துள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவை விட, நீர்திறப்பு அதிகரித்துள்ளதால் நீர்மட்டம் மீண்டும் சரிய தொடங்கியுள்ளது. அணையின் நீர்மட்டம் 120 அடியில் இருந்து 119.76 அடியாகவும், நீர் இருப்பு 93.47 டிஎம்சியில் இருந்து 93.08 டிஎம்சியாகவும் சரிந்துள்ளது.

## அடர் பனிமூட்டம் - டெல்லியில் 100 விமானங்கள் தாமதம் வட இந்தியாவில் ரயில் சேவை பாதிப்பு



புதுடெல்லி, ஜன.4

கடும் குளிர் காரணமாக வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இன்று காலை அடர் பனி மூட்டம் நிலவியதால், டெல்லியில் 100 விமான சேவைகள் தாமதமாகின. வட இந்தியாவில் பல்வேறு ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

விமான சேவை கண்காணிப்பு இணையதளத்தின் தரவுகள் படி, டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்படும் 60 விமானங்கள், வந்து சேர வேண்டிய 193 விமானங்கள் பனி மூட்டம் காரணமாக தாமதமாகின. ஆறு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. கொல்கத்தா விமான நிலையத்தில், அங்கிருந்து புறப்பட வேண்டிய 17 விமானங்களும், வர வேண்டிய 36 விமானங்களும் பனி மூட்டம் காரணமாக தாமதமாகின. ஒரு விமானம் ரத்து செய்யப் பட்டுள்ளது.

அடர் பனி மூட்டம் போர்வை போல இருந்ததால் டெல்லி விமான நிலையத்தில் வெள்ளிக் கிழமை காலை எதிரிலிருக்கும் காட்சிகள் எதுவும் தெளிவாக தெரியவில்லை என்பதால் விமான சேவைகளில் பாதிப்பு ஏற்படக் கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அதேபோல், அடர் பனி மூட்டம் காரணமாக நீண்ட தூர ரயில் சேவைகள் உட்பட குறைந்தது 24 ரயில்கள் தாமதமாக வந்து செல்வதாக இந்திய ரயில்வே தெரிவித்துள்ளது. அவைகளில் சில நான்கு மணி நேரம் தாமதமாக செல்கின்றன.

பனி மூட்டம் காரணமாக பஞ்சாப் மாநிலம் பதிண்டாவில் தனியார் பேருந்தும் லாரியும் மோதியதில் சுமார் 20 முதல் 25 பயணிகள் காயமடைந்தனர்.

தேசிய தலைநகர் பகுதியில் தொடர்ந்து ஐந்தாவது நாளாக பனி பாதிப்பு நிலவுகிறது. நகரின் அதிகபட்ச வெப்ப நிலை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் டெல்லிக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. அடர் மற்றும் மிகவும் அடர் பனி மூட்டம் காணப்படும் என்றும் கணித்துள்ளது.

நொய்டாவில் மறு உத்தரவு வரும் வரையில் 8 வரையுள்ள வகுப்புகளுக்கு பள்ளி விடுமுறை அளித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

ஹரியானா, உத்தரப் பிர தேசம், ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் பிஹார் மாநிலங்களிலும் கடும் பனி மூட்டம் நிலவி வருகிறது. பிஹாரில் தலைநகர் பாட்னா உட்பட மாநிலத்தின் பல பகுதிகளில் அதிகபட்ச வெப்ப நிலை மிகவும் குறைவாக உள்ளது. இதனால் அங்கு பள்ளிகள் செயல்படும் நேரத்தை மாற்றி அரசு உத்தரவிட்டுள்ளது. ஜன.6ம் தேதி வரை பள்ளிகள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை செயல்படும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

## தடையை மீறி யாத்திரை: மதுரையில் நடிகை குஷ்பு உள்பட பாஜகவினர் கைது



மதுரை, ஜன.4

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து பாஜக மகளிரணி சார்பில் அண்ணா பல்கலைக் கழக சம்பவத்தை கண்டித்து பாஜக தாய்மார்களின் நீதி யாத்திரை போராட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்த யாத்திரை மதுரையில் இன்று (ஜன.3) தொடங்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் யாத்திரைக்கு போலீஸார் அனுமதி வழங்கவில்லை.இருப்பினும் தடையை மீறி மதுரை செல்லத்தம்மன் கோயில் அருகே நீதி யாத்திரை காலை 10 மணிக்கு தொடங்கியது. பாஜக மாநில மகளிரணித் தலைவர் உமாரவி தலைமை வகித்தார்.

தேசிய மகளிர் ஆணைய முன்னாள் உறுப்பினர் நடிகை குஷ்பு யாத்திரையை தொடங்கி வைத்தார். இதையடுத்து குஷ்பு மற்றும் யாத்திரையில் பங்கேற்ற பாஜக மகளிர் அணியினரை போலீஸார் கைது செய்தனர். முன்னதாக குஷ்பு பேசும்போது, "இந்த யாத்திரை ஒரு தொடக்கம் தான். நீதி கிடைக்கும் வரை ஓய மாட்டோம்" என்றார். (விரிவான செய்தி... 4ஆம் பக்கம்)



## மகா பிரபு தொகுத்து எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா தொழில் துறையில் சாதனை படைத்தவர்களுக்கு விருது

கல்லல் ஜன.4

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் மகா பிரபு எழுதிய "பட்டாசு", " மகாராஜா' மற்றும் "மனிதம்" நூல் வெளியீட்டு விழா 2024 டிசம்29 அன்று நடைபெற்றது. மனிதம் என்ற தொகுப்பாசிரியர் மகா பிரபு தொகுத்து எழுதிய உறவுகள் என்ற நூலில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.



சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் இவ்விழாவிற்கு தலைமையேற்று மூன்று நூல்களையும் வெளியிட்டார். இவர் தனது உரையில் தன் வாழ்வில் நூல்கள் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது எனவும், மாணவர்களின் கல்வி சார்ந்த வளர்ச்சிக்கு பொது மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நூல்கள் எவ்வளவுசிறந்தது என்பதை சுவாரஸ்யத்துடன் எடுத்துக் கூறினார்.

மனிதம் என்ற நூல் 25 எழுத்தாளுர்களுடன் சேர்ந்து மகா பிரபு எழுதி தொகுத்த நூலாகும். இது உறவுகள் என்ற நூலில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. மனிதம் நூல் மூலம் 23 புதிய எழுத்தாளர்கள் தமிழ் இலக்கிய உலகத்திற்கு கிடைத்துள்ளனர். கடந்த ஆண்டு இதுபோல் எழுதப்பட்ட "உறவுகள்" நூல் மூலம் 22 புதிய எழுத்தாளர்கள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. புலவர் மெய்யாண்டவர் நூலினை இணைந்து வெளியிட தலைமையாசிரியர் அழகப்பன் நூலினை பெற்றுக் கொண்டார். கவிஞர் தமிழ்க்கனல் இந் நூலுக்கு மதிப்புரை வழங்கினார். மகா பிரபு எழுதிய இரண்டாவது கவிதை நூல் "பட்டாசு" மற்றும் இவரது இரண்டாவது நுண்கதை நூல் "மகாராஜா" இதே விழாவில் வெளியிடப்பட்டது .

"பட்டாசு" நூலை புலவர் காளிராசா வெளியிட நல்லாசிரியர் வனிதா பெற்றுக் கொண்டார். தமிழாசிரியர் துஷ்யந்த் சரவணராஜ் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கினார்.

" மகாராஜா " என்ற நூலை மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி மற்றும் பயிற்சி நிறுவன மூத்த விரிவுரையாளர் முனைவர் சேவற்கொடியோன் வெளியிட காரைக்குடி சிக்ரி விஞ்ஞானி அசோக் நூலினை பெற்றுக் கொண்டார். முத்து டான்ஸ் அகாடமி நிறுவனர் முத்துமாரி இளஞ்செழியன் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கினார். இவ்விழாவில் பல்வேறு துறைகளில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இராசு வரவேற்புரை வழங்க ஆரோக்கியசாமி நன்றியுரையாற்றினார்.

சிவகங்கை கவுன்சிலர் ராஜா, சிவகங்கை ஒன்றிய செயலாளர் செல்வமணி, நடராஜபுரம் சொசைட்டி முன்னாள் தலைவர் சேவியர் தாஸ், முனைவர் உஷா, முனைவர் மெய்யாத்தாள், தலைமையாசிரியை சாந்தி, உதவிப் பொறியாளர் பிரேம் சங்கர், மரபுவழி மருத்துவர் விஜய சாரதி, தொழில் முனைவோர் அமலன், ஜேசுதாஸ் வாழ்த்துரை வழங்கினர். பத்திரிக்கை துறையில் பன்முக சாதனைகளை படைத்து வரும் "மாலை தந்தி"நாளிதழின் ஆசிரியர் - வெளியீட்டாளர் முனைவர் ஆ.பொன்ராஜ் மற்றும் இணை ஆசிரியர் கரு.சந்துரு ஆகியோருக்கு சிறந்த சமூகப் பணியாளர் விருதினை முன்னாள் அமைச்சரும் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பி.ஆர்.செந்தில் நாதன் பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கினார்.

## தமிழ்வழியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1, 000 வழங்கும் திட்டத்தில் பயனடைந்த மாணவிகள் நன்றி

வேலூர், ஜன.4

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1, 000 வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை தூத்துக்குடி மாவட்டத்தில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலெட்சுமி, 909 கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்திற்கான பற்று அட்டைகளை வழங்கினார்.

புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தில் பயனடைந்த மாணவிகள் தங்களுக்கு மாதம் ரூ.1000 கல்வி உதவித்தொகை கிடைக்குமா என்ற ஏக்கம் நீங்கி தங்களுடைய மனம் நிறைந்துள்ளதாக தெரிவித்து இத்திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துகொண்டனர்.

நம்முடைய மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் 11, 966 மாணவிகள் புதுமைப்பெண் திட்டத்தின்கீழ் ஏற்கனவே பயனடைந்து வருகின்றனர். தற்பொழுது அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளும் பயன் பெறும் வகையில் புதுமைப் பெண் திட்டம் இன்று தமிழ்நாடு முதலமைச்சரால் புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள புதுமைப்பெண் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் 909 மாணவிகள் பயனடையவுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் நிச்சயம் உயர்கல்வி பயில வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களையும், பல்வேறு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டங்களையும்





செயல்படுத்தி வருகிறார். கடந்த காலங்களில் நம்முடைய

மாவட்டத்தில் 10, 000 மாணவிகள் 12 ஆம் வகுப்பு முடித்திருந்தால் அவர்களில் சுமார் 2000 மாணவிகள் உயர்கல்வி பயில்வதில்லை என தரவுகள் தெரிவித்திருந்தன.

தற்பொழுது அரசின் புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு இந்த எண்ணிக்கை 1000 என்ற அளவிற்கு குறைந்துள்ளது. அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ,

மாணவிகள் அனைவரும் உயர்க்கல்வியில் சேருவதை உறுதி செய்யும் வகையில் அரசின் சார்பில் உயர்வுக்குப்படி போன்ற வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. மேலும் ஆசிரியர்களுக்கு உயர் கல்வியில் உள்ள வாய்ப்புகள் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டு அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தெரிவிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

அரசின் புதுமைப்பெண் திட்டத்தில் பயனடைந்து வரும் நம்முடைய மாவட்டத்தை சேர்ந்த சுமார் 13, 000 மாணவிகள் இத்திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்தி கொண்டு தங்களுடைய எதிர் காலத்தை சிறப்பாக அமைத்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலெட்சுமி, தெரிவித்தார்.

புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தில் பயனடைந்த மாணவி செல்வி சௌமியா தெரிவித்ததாவது.

நான் வேலூர் வேலப்பாடி பகுதியில் வசித்து வருகிறேன். என்னுடைய பள்ளி படிப்பை வேலூர் விநாயக முதலியார் மேல்நிலைப் பள்ளியில் படித்தேன் தற்பொழுது முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரியில் 3 ஆம் ஆண்டு பி.ஏ. வரலாறு இளநிலை பட்டப்படிப்பு படித்து வருகிறேன். என்னுடைய தந்தை ஒரு ஓட்டல் கடையில் வேலை செய்து வருகிறார். என்னுடைய பெற்றோர் கடினமான பொருளாதார சூழ்நிலையிலும் என்னை உயர்க்கல்வி பயில கல்லூரியில் சேர்த்துள்ளனர். அரசு பள்ளிகளில் பயின்று உயர்க்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மட்டும் புதுமைப் பெண் திட்டத்தில் மாதம் ரூ. 1000 வழங்கப்பட்டு வந்தது. அரசு உதவிப்பெறும் பள்ளியில் பயின்ற எனக்கு இந்த உதவி தொகை கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் இருந்தது.

தற்பொழுது நம்முடைய முதல்வர் புதுமைப்பெண் திட்டத்தை விரிவாக்கம் செய்து, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர் கல்வி பயிலும் என்னை போன்ற மாணவிகளும், மாதம் ரூ. 1000 கல்வி உதவித் தொகை பெறலாம் என அறிவித்து இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். இதன் மூலம் என்னுள் இருந்த ஏக்கம் நீங்கி இத்திட்டத்தில் பயன் பெற்று என்னுடைய மனம் நிறைந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாதம் பெறும் ரூ.1000த்தை நான் என்னுடைய தேர்வு கட்டணம் அல்லது போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்திடும் வகையிலான புத்தங்களை வாங்குவது அல்லது எனக்கான சிறிய மருத்துவ செலவு என பயன்படுத்தி கொள்வேன். இதன் மூலம் என்னுடைய பெற்றோரின் சுமையை என்னால் குறைக்க முடியும். இத்திட்டத்தை கொண்டு வந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன். புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தில் பயனடைந்த மாணவி செல்வி செண்பக வள்ளி தெரிவித்ததாவது

நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரியில் 3 ஆம் ஆண்டு பி.எஸ்.சி. நர்சிங் படித்து வருகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் கல்வி அறிவில் மட்டுமின்றி ஆற்றலிலும் சிறந்து விளங்க வேண்டும் என தொடங்கப்பட்ட திட்டம் தான் புதுமைப்பெண் திட்டம். முதலில் அரசு பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மட்டும் மாதம் ஆயிரம் வழங்கப்பட்ட புதுமைப்பெண் திட்டமானது தற்பொழுது அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளும் பயனடையும் வகையில் விரிவாக்கம்

செய்யப்பட்டுள்ளது. இதனால் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த உதவித்தொகையின் மூலமாக என்னுடைய மேற்படிப்பிற்கு மட்டுமல்லாமல் சிறு சிறு தேவைகளான பாட புத்தகங்கள் வாங்குவது, என்னுடைய பெற்றோரை சார்ந்து அல்லாமல் என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் இந்த புதுமைப்பெண் திட்டம் எனக்கு பயனுள்ளதாக உள்ளது. எனவே இத்திட்டத்தை தொடங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி துணை மேயர் மா. சுனில்குமார், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் இரா. பால சுப்பிரமணியன், மண்டலக் குழுத்தலைவர்கள் ஆர்.நரேந்திரன், கே.யூசுப் கான், மாமன்ற உறுப்பினர் க.சு. சண்முகம், மாவட்ட சமூக நல அலுவலர் இரா. உமா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வாழ்த்துக்களுடன், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான ம.சுப்பிரமணியன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.வி.எம். பிரபாகரராஜா மற்றும் அனைவரின் ஆலோசனைப்படி மேடவாக்கம், ஆர். எஸ். லோகேஸ்வரா, புனித தோமையார்மலை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளராக கழகத்தில் பணியாற்ற வாய்ப்பு வழங்கியமைக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.

## போட்டித் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த நேரடி இலவச பயிற்சி வகுப்புகள்! திண்டுக்கல் ஆட்சியர் தகவல்

திண்டுக்கல் ஜன.4

திண்டுக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத் தன்னார்வ பயிலும் வட்டம் மூலமாக அரசுப் பணிக்காலியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் வேலை நாடுநர்களுக்கு இலவசப் பயிற்சிவகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 2025ஆம்



ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட நிரலின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி 4/ Mãæ (TNPSC Group-IV/ VAO) போட்டித் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த நேரடி இலவச பயிற்சி வகுப்புகள் இவ்வலுவலக வளாகத்தில் இன்று 03.01.2025 முதல் துவங்கப் படவுள்ளது. இப்பயிற்சியானது திறன்மிக்க வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. மேலும் மாதிரித் தேர்வுகளும் இலவசமாக நடத்தப்பட உள்ளன.

எனவே, போட்டித் தேர்விற்குத் தயாராகும் விண்ணப்பதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு விருப்பமுள்ளவர்கள் இவ்வலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொண்டு தங்களது விவரங்களைப் பதிவு செய்து பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடியில் அரசால் தடை செய்யப்பட்ட வெட்டிய செம்மரங்களை அதிகாரிகள் ஆய்வு

தூத்துக்குடி ஜன.4

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் பஞ்சாயத்து உட்பட்ட பாஞ்சாலங்குறிச்சி சாலையில் ஆரைக்குளம் மலைப்பகுதியில் 50 ஏக்கரில் வளரப்பட்ட 150 செம்மரங்கள் வனத் துறையின் அனுமதியை மீறி வெட்டப்படுவதாக புகார் எழுந்தது இதை எடுத்து வனத்துறை அதிகாரிகள் மற்றும் வருவாய் துறை அதிகாரி நேற்று நடந்த இடத்தில் ஆய்வு செய்தனர் புதுச்சேரியை சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான இடத்தில் வளர்க்கப்பட்ட அந்த செம்மரங்களை வெட்டிக் கொள்ள வனத்துறையிடம் அனுமதி பெறப்பட்டது



அந்த நிலம் தொடர்பாக சிலர் ஆட்சேபனை தெரிவித்ததால் வனத்துறை அனுமதியை ரத்து செய்தது இதனால் செம்மரங்கள் அதே இடத்தில் வேரோடு புடுங்கப்பட்ட நிலையில் அங்கே கிடப்பதாக ஆய்வு செய்த அதிகாரிகளுக்கு குழுவினர் மாவட்ட நிர்வாகத்திற்கு அறிக்கை தாக்கல் செய்தனர் இதற்கு இடையே செம்மரங்களை குறிவைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் சில முயற்சி ஒப்பாக தகவல் வழியாகி உள்ளது புகார் தொடர்ந்து ஒட்டப்பிடாரம் தாசில்தார் ஆனந்த் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் போலீசார் முன்னிலையில் நேற்று ஆய்வு செய்தனர் அந்த இடத்தில் அளக்கும் பணியில் ஈடுபட்டனர் செம்மரங்களை யாரும் வெட்டக்கூடாது ஏற்கனவே வெட்டி அங்கு கிடைக்கும் செம்மர தடிகளை அப்புறப் படுத்த கூடாது மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என தாசில்தார் ஆனந்த் எச்சரிக்கை விடுத்தார்.

## தேனி கொட்டக்குடி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

தேனி.ஜன.4

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம் கொட்டக்குடி ஊராட்சியில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.90.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அங்கன்வாடி மையம், உண்டு உறைவிடப்பள்ளி ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி. ஷஜீவனா, கடந்த (ஜன 02) செய்தியாளர் பயணத்தின்போது நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

கொட்டக்குடி ஊராட்சி, குரங்கனியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் (விநிழிஸிணிநிஷி) கீழ் ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சிமன்ற கட்டடம் கட்டுமான பணிகளையும், கொட்டக்குடியில் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலை முடிவுற்ற பணிகளையும், கொட்டக்குடி மெயின் சாலை முதல் காரிப்பட்டி வரை 5 கி.மீ மலைச்சாலையில் கல்பாவுதல் பணிகள் நடைபெற்றுவருவதையும்,



கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் (KKI) கீழ் தலா ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் 28 வீடுகள் கட்டுமான பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பணிகளை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர் பயணத்தின்போது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடாந்து, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு, மாணவ, மாணவியர்களின் கற்றல் திறன் குறித்தும், சத்துணவு, காலை உணவுத் திட்டம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் குரங்கனி காவல் நிலையத்தில் சிசிடிவி கேமிரா, காவலர்களின் விபரம், கணினி இருப்புநிலவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து கொட்டக்குடி அரசு துணை சுகாதார நிலையம் மற்றும் குரங்கனி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும் விதம், மருந்து மாத்திரைகளின் இருப்பு, மருத்துவமனையில் பராமரிக்கப்படும் பல்வேறு பதிவேடுகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அங்கன்வாடி மையத்தில், குழந்தைகளுக்கு வழங்கப்படும் வழங்கப்படும் ஊட்டச்சத்து பொருட்கள், குழந்தைகளின் வயதிற்கேற்ற எடை, உயரத்தில் உள்ளனரா எனவும், அங்கன்வாடி மையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தொல்குடி திட்டத்தின் கீழ் பழங்குடியினர் மக்கள் அதிகமாக வாழும் குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக, கொட்டக்குடி ஊராட்சி, குரங்கனியில் ரூ.11, 25, 000/ மதிப்பீட்டில் நியாய விலைக்கடை கட்டுமானப் பணிக்கு மாவட்ட ஆட்சியர் அடிக்கல் நாட்டினார்.

இவ்வாய்வில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அபிதா ஹனீப், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்). பழனிவேல், மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர் சசிகலா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள். அய்யப்பன், தனலட்சுமி, உதவி பொறியாளர்கள் சோனா, விவேகானந்தன், ஊராட்சிமன்ற தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் இருந்தனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பி.டி.ஒ. அலுவலகம், காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீ.செந்தில்குமரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள்

விழுப்புரம் ஜன04


விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்பட்டுவரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. தன்னார்வ பயிலும் வட்டத்தில் நடத்தப்படும் இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு பல்வேறு மாணவர்கள் தேர்ச்சி பெற்று அரசுப் பணிகளில் சேர்ந்துள்ளனர்.



தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்படவுள்ள TNPSC GROUP-IV தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் 08.01.2025 அன்று முதல் திங்கள்(முதல்வெள்ளி) காலை 10.00 மணிமுதல்மதியம் 1.00 மணி வரை நடைபெற உள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயனடைய விரும்பும் நபர்கள் 07.01.2025க்குள் விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரில் அணுகி முன்பதிவுசெய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

எனவே விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி. பழனி. தெரிவித்துள்ளார்.





சிவகங்கை தெற்கு மாவட்டம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளி வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்தநாளை முன்னிட்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் வழ.வே.பாலையா மண்டல துணைச் செயலாளர் முத்துராசு மாவட்ட துணைச் செயலாளர் சுடர்மணி மாவட்ட செய்தித்தொடர்பாளர் ஆதிவளவன் ஒன்றிய செயலாளர்கள் ராமதாஸ், கண்ணன், வெற்றிவிஜயன், குணபாலன், அம்பேத், ரமேஷ், கருப்பையா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## தேனியில் கைம்பெண்கள்-ஆதரவற்ற மகளிருக்கான சிறப்பு முகாம்

தேனி ஜன.4

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கான சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா, தலைமையில் நேற்று நடைபெற்றது.

தேனி மாவட்டம், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், பேரிளம் பெண்கள் ஆகியோரின் குறைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் பல்வேறு துறைகள் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்து சேவைகள் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



இச்சிறப்பு முகாமில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை, ஆதார் அட்டையில் திருத்தம், வாக்காளர் அட்டை, முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் அட்டை என பல்வேறு விதமான கோரிக்கை அடங்கிய மனுக்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

பெறப்பட்ட 73 மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுரை வழங்கினார். இக்கூட்டத்தில், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) சாந்தி, மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வளர்மதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பொம்மையக் கவுண்டன்பட்டியில் வீரமங்கை வேலுநாச்சியார் 295 வது பிறந்தநாள் விழா



தேனி, ஜன.4

தேனிமாவட்டம்பொம்மையக் கவுண்டன்பட்டியில் அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் கட்சி தேனி வடக்கு மாவட்டத்தின் சார்பில் சுதந்திர போராட்ட வீராங்கனை, ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றிகண்ட ராணி வீரமங்கை வேலுநாச்சியார் 295 வது பிறந்தநாள் கொண்டாடபட்டது.

இந்நிகழ்வில் தேசிய மகளிரணி துணைதலைவியும் மாநில பொது செயலாளருமான லெட்சுமி மாயாண்டி, மாவட்ட தலைவர் இரா.செந்தில்குமார், மாவட்ட பொதுச்செயலாளர் மாயாண்டி, மாவட்ட இணைச் செயலாளர்கள் சரவணன், நாகராஜ், மதுதேவன், பெரியகுளம் ஒன்றிய செயலாளர் வடிவேல், வழக்கறிஞர் பிரிவு விக்னேஷ்குமார், தொண்டரணி மணிகண்டன், மற்றும் மகளிரணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்துகொண்டுபுகழ் வணக்கம் செலுத்தினர்.

## டிச.09 முதல் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது
### தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தகவல்

தூத்துக்குடி ஜன.4

தூத்துக்குடி மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையினை சிறப்பாக கொண்டாடும் வகையில், தமிழகத்திலுள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக்கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



அதன்படி, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 988 நியாய விலைக் கடைகள் மூலம் நடைமுறையில் உள்ள 530261 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கு இன்று 03.01.2025 முதல் டோக்கன் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற 09.01.2025 முதல் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது.

மின்னணு குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர் மட்டும் நியாய விலைக் கடைக்குச் சென்று தங்களது கைவிரல் ரேகையினைப் பதிவு செய்து பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகம் குறித்த புகார்கள்/ குறைகள் ஏதுமிருப்பின் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டுப்பாட்டு அறைக்கு 04612341471 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

## வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 295வது பிறந்த நாள்
## அரசின் சார்பில் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அமைச்சர்

சிவகங்கை ஜன.4



சிவகங்கை மாவட்டம், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 295வது பிறந்த நாள் அரசு விழாவினை முன்னிட்டு, காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சூரக்குளத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபத்தில் திருவுருவச் சிலைக்கு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீன் உமேஷ் டோங்கரே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை) எஸ்.மாங்குடி (காரைக்குடி) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, அவ்வளாகத்தில் அமைந்துள்ள வீரத்தாய் குயிலி அவர்களின் திருவுருவச்சிலை மற்றும் நினைவுச் சின்னத்திற்கும், அனைவரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசுகையில், இந்திய விடுதலை வரலாற்றில் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்தி வெற்றி கண்டு, தமிழகத்திற்கு பெருமை சேர்த்த முதல் வீரப்பெண்மணி வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 295வது பிறந்த நாள் விழா இன்றையதினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சுதந்திரப் போராட்டத் திற்கு பாடுபட்ட தியாகச் செம்மல்களை என்றென்றும் போற்றி பாதுகாக்கும் வண்ணம், நினைவு மண்டபங்கள் அமைத்து பாதுகாத்து வந்தத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆவார். அவ்வழியில் சிறப்பான ஆட்சியினை தமிழகத்தில் நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழர்களின் அளப்பறியாப் பங்கு குறித்தும், வீரர்களின் தியாகம் குறித்தும், போராட்டங்கள் குறித்தும், தாய்மொழியான தமிழ்மொழி குறித்தும், வீரம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளில் பங்கு பெற்ற முன்னோர்களை கௌரவிக்கும் பொருட்டும், இதனை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்தவகையில், இந்தியா வரலாற்றில் முதல் பெண்மணியாக சுதந்திரத்திற்காக தனித்து நின்று போராடிய வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையில், சிவகங்கை மாவட்டத்தில், இவ்வீரப் பெண்மணிக்கு நினைவு மண்டபம் அமைத்து, ஆண்டுதோறும் அவர்களின் பிறந்த நாளினை, அரசு விழாவாக கொண்டாடிடும் வகையில், அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 3ஆம் தேதி அரசு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, நேற்றைய தினம் அவர்களது 295வது பிறந்த நாள் விழா இங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும், சுதந்திர போராட்டத்தில் பங்குபெற்ற சுதந்திர போராட்ட வீரர்களான மருது சகோதரர்களின் புகழை பறைசாற்றுகின்ற வகையில் திருப்பத்தூரில் மருதுபாண்டியர்களின் நினைவு மண்டபமும் மற்றும் வீரத்தாய் குயிலி அவர்களின் நினை வாக, இவ்வளாகத்தில் நினைவுச் சின்னமும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிற்பிற்கிணங்க வீரத்தாய் குயிலி நினைவுச்சின்னத்திற்கு அருகில் ரூ.50.00 திருவுருவச்சிலையும் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சரின் திருக்கரங்களால் காணொலி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, சுதந்திர போராட்டத்தில் பங்கேற்ற வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கும் நகரம்பட்டி கிராமத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைப்பதற்கான பணிகளும், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் கிராமத்தில் சுதந்திர போராட்ட காலத்தில் அண்ணல் காந்தியடிகள் ஜீவாவுடன் சந்தித்தது நினைவாக ரூ.03.00 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கும் பணியும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதுபோன்று, சுதந்திரப் போராட்டத் தியாகிகளை போற்றிடும் வகையில் அவர்களை கௌரவித்தும், இளைய தலைமுறையினருக்கு முன்மாதிரியாக திகழும் வகையிலும், தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதனை எதிர்கால சந்ததியினர்கள் கருத்தில் கொண்டு, நாட்டிற்கான அர்பணிப்பு உணர்வுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

## சீனாவை மிரட்டும் HMPV Virus.. பலியாகும் மக்கள்

பெய்ஜிங், ஜன.4

சீனாவில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு கொரோனா வைரஸ் தொற்று பரவியது. கடந்த 2019 ஆம் ஆண்டு பரவிய இந்த வைரஸ் தொற்று உலகம் முழுவதும் பரவியது. இதனால் உலக நாடுகள் ஸ்தம்பித்தன. பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டது. தற்போதுதான் கொரோனா தொற்று பாதிப்பில் இருந்து பல்வேறு நாடுகளும் மீண்டு பொருளாதார வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.

கொரோனா வைரஸ், சீனாவின் பயோ வெபன்ஸ் என அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளும் குற்றம்சாட்டின. கொரோனா தொற்று பரவலுக்கு சீனாதான் காரணம் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன. இதுதொடர்பாக சர்வதேச



அளவில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தற்போது சீனாவில் HMPV என குறிப்பிடப்படும் மர்ம வைரஸ் பரவி வருகிறது.

மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (HMPV) வைரஸ் தொற்றால் சீனாவில் உள்ள மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. இதுதொடர்பான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் நிரம்பி வழிகின்றன. இந்த வைரஸ் தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு, உயிரிழப்பும் அதிகரிப்பதால் நோய் பாதித்தவர்களை தனிமைப்படுத்தும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அனைத்து வயதினரும் இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது. குறிப்பாக வடக்கு மாகாணங்களில் 14 வயதுக்குட்பட்டவர்கள் பிவிறிகூஷி வைரஸ் பாதிப்பால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. நோய் பாதிப்பு அதிகரித்து வருவதாக சீனா அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுவாசக் கோளாறுகள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. சிறு குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்கள் இந்த வைரஸால் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது. இந்த வைரஸால் சீனாவில் உள்ள மருத்துவமனைகள் மட்டுமின்றி தகனமேடைகள் மற்றும் கல்லறைகளும் நிரம்பி வழிவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பான வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வெளியாகி பீதியை ஏற்படுத்தியுள்ளது. HMPV 2001ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தொற்றின் அறிகுறிகளாக இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு, மூச்சுத் திணறல் ஆகியவை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நோய்த் தொற்றின் மருத்துவ அறிகுறிகள் தீவிரமடைந்து மூச்சுக் குழாய் அழற்சி அல்லது நிமோனியா போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும் எனவும் எச்சரிக் கப்பட்டுள்ளது.

## இராமேஸ்வரத்தில் அயலகத் தமிழர் நலன் மறுவாழ்வு துறையின் மூலம் 'வேர்களைத் தேடி' என்னும் நிகழ்ச்சி

ராமேஸ்வரம் ஜன.4

இராமேஸ்வரத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையின் மூலம் அயல் நாடுகளில் உள்ள தமிழ் மாணவர்கள் பங்கு கொள்ளும் 'வேர்களைத் தேடி" என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பங்கேற்று அயலகத் தமிழ் மாணவ, மாணவியர்களுடன்; கலந்துரையாடினார்.



ராமநாதபுரம் மாவட்டம் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள் தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்படும் என அறிவித்து அதன்படி இந்த பண்பாட்டு பயணம் 'வேர்களைத் தேடி" என்ற பெயரில் அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம் சுற்றுலாத் துறை, கலை பண்பாட்டுத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, தொல்லியல் துறை, காவல் துறை மற்றும் வருவாய்த்துறை உள்ளிட்ட பிற துறைகளுடன் இணைந்து இரண்டு கட்டங்களாக பண்பாட்டு பயணம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இரண்டு கட்ட பயணத்தில் 157 அயலக தமிழ் மாணவ, மாணவியர்கள் முதன்முறையாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டு தமிழின் தொன்மை, தமிழர் வாழ்வியல் கலாச்சாரம் குறித்து விளக்கப்பட்டது.


மூன்றாம் கட்ட பயணமாக உகாண்டா, நார்வே, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு, மலேசியா, இலங்கை, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் மியான்மர் ஆகிய 10 நாடுகளைச் சேர்ந்த 38 அயலக மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தற்பொழுது வருகை தந்துள்ளார்கள். இவர்கள் தமிழின்; தொன்மை, தமிழர் வாழ்வியல், கலாச்சாரம் மற்றும் தமிழர்களின் கலைகள், கலை நிகழ்ச்சிகள் குறித்து அறிந்து வருகிறார்கள். இதன் மூலம் தாய் தமிழ்நாட்டின் சிறப்புகள் அறிந்து பயன்பெற மிக பயனுள்ளதாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் இராஜமனோகரன் மாவட்ட சுற்றுலா அலுவலர் நித்திய கல்யாணி வட்டாட்சியர்கள் ஜபார் முகம்மது தமீம் ராஜா தமிழ்நாடு சுற்றுலாத்துறை அலுவலக மேலாளர் இனோக் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி



## வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு அரசியல் கட்சியினர் மாலை







மதுரை, ஜன.4:

சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்ட பொம்மன் பிறந்தநாளை முன்னிட்டு இன்று மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது சிலைக்கு பல்வேறு கட்சியினர், அமைப்பினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தி.மு.க. சார்பில் மாநகர் மாவட்ட செயலாளர் தளபதி எம்.எல்.ஏ. கட்டபொம்மன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் கட்சி ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ம.தி.மு.க. சார்பில் மதுரையில் உள்ள கட்ட பொம்மன் சிலைக்கு துரை வைகோ எம்.பி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் அவை தலைவர் அர்ஜுன் ராஜ், துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா, ராஜேந்திரன். பூமிநாதன் எம்.எல்.ஏ., ரகுராமன் எம்.எல்.ஏ,, மாவட்ட செயலாளர்கள் முனியசாமி, மார்நாடு, ஜெயராமன், மற்றும் கட்சிநிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். அ.தி.மு.க. சார்பில் மதுரையில் உள்ள கட்டப்பொம்மன் சிலைக்கு முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜூ, ஆர்.பி. உதயகுமார், ராஜன்செல்லப்பா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட நிர்வாகிகள் அ.தி.மு.க. (ஓ.பி.எஸ். அணி) சார்பில் கட்டபொம்மன் சிலைக்கு முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் முன்னாள் எம்.பி. கோபால கிருஷ்ணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதேபோல் பல்வேறு கட்சியினரும், அமைப்பினரும் கட்டபொம்மன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அந்த பகுதியில் 100க்கும் மே மேற்பட்ட போலீஸ் பாதுகாப்பு ஈடுபட்டிருந்தனர்.

## அண்ணா பல்கலை விவகாரம்! பாஜக மகளிர் அணி நிர்வாகி குஷ்பூ உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கைது! ஆட்டு மந்தையில் அடைத்து வைக்கப்பட்டதால் பரபரப்பு

மதுரை, ஜன.4

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நீதி கேட்கும் போராட்டம் மதுரையிலிருந்து தொடங்கி சென்னை வரை நடைபெறும் எனவும் மதுரையில் தொடங்கி திண்டுக்கல் திருச்சி விருத்தாச்சலம் விழுப்புரம் வழியாக சென்னைக்கு சென்றடைந்து அங்கு ஆளுநரை சந்தித்து மனு அளிக்க உள்ளதாக பாஜக சார்பில் அறிவிக்கப்பட்டது

இதனையடுத்து இன்று தமிழக பாஜக மகளிர் அணி சார்பில் மதுரை சிம்மக்கல் பகுதியில் உள்ள கண்ணகி கோவிலான செல்லத்தம்மன் கோவில் முன்பாக நீதி கேட்கும் பேரணி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் காவல்துறை தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டது

இந்நிலையில் தடையை மீறி இன்று பேரணி நடத்துவதாக கூறிய பாஜகவினர் செல்லத்தம்மன் கோவில் முன்பாக திரண்டு நின்று திமுக அரசை கண்டித்தும் அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நீதி கேட்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

அப்போது செல்லத்தம்மன் கோவிலில் உள்ள கண்ணகி சிலைக்கு மிளகாய் பொடி அரைத்து பூசும் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழகத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் பாலியல் குற்றங்களை தடுப்பதற்கு சாந்த நிலையில் உள்ள கண்ணகி உக்கிர நிலையில் தட்டிக் கேட்க வேண்டும் என்பதற்காக இதுபோன்று நூதன போராட்டத்தில் ஈடுபடுவதாக கூறி உரலில் மிளகாய் வற்றலை இடித்தும் மிளகாய் வற்றலை இலை அம்மியில் அரைத்தும் நூதன போராட்டத்தில் ஈடுபட்ட பாஜக மகளிர் அணியினருடன் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த கத்ரீனா என்ற வெளிநாட்டு பெண்ணும் பாஜக மகளிர் அணி நிர்வாகிகளுடன் இணைந்து மிளகாய் பொடியை இடித்தார். அப்போது பாஜக மகளிர் அணி நிர்வாகிகள் ரஷ்யத் பெண்ணான கத்ரீனாவுடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.





அப்போது செல்லத்தம்மன் கோவில் முன்பாக வருகை தந்த பாஜக மகளிரணி நிர்வாகி குஷ்பு மற்றும் பாஜக மாநில தலைவர் உமா ரதி ஆகியோர் தலைமையில் கையில் சிலம்புடன் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதனைத் தொடர்ந்து குஷ்பு உரையாற்றி முடித்த பின்பாக காவல்துறையினர் பாஜக மகளிரணி நிர்வாகி குஷ்பு மற்றும் மகளிரணி மாநில தலைவரை கைது செய்ய முயன்றனர் அப்போது ஒருவருக்கொருவர் தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் குஷ்பு மற்றும் மகளிரணி நிர்வாகிகள் கீழே தடுமாறி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது

பின்னர் தடுமாறி விழுந்த குஷ்பு தனது அருகே கீழே விழுந்த மகளிரணி நிர்வாகிகளை குஷ்பூ கையை பிடித்து தூக்கி நிறுத்தினார் இதனையடுத்து பாஜக நிர்வாகி குஷ்புவை கைது செய்து அழைத்து வந்த காவல்துறையினர் மகளிரணி நிர்வாகிகளை கைது செய்து சிம்மக்கல் பகுதியில் உள்ள பல்வேறு மண்டபங்களில் அடைத்து வைத்தனர்

இந்நிலையில் காவல்துறையினரால் கைது செய்ய செய்யப்பட்ட பாஜக மகளிரணி நிர்வாகி குஷ்பு மாநில மகளிரணி தலைவர் உமா ரதி உள்ளிட்ட மகளிரணியினர் மதுரை சிம்மக்கல் ஓர்க்ஷாப் ரோடு பகுதியில் உள்ள ஆயிரம்வீட்டு யாதவர் ஆட்டுமந்தை திருமண மண்டபத்தில் அடைத்தனர்

இதனால் மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்ட மகளிரணி நிர்வாகிகள் ஆட்டுமந்தையில் ஆடுகள் அடைத்து வைக்கப் பட்ட மந்தையில் தங்களையும் அடைத்து வைக்கப்பட்டுள் ளதால் கடுமையான துர்நாற்றம் வீசுவதோடு ஆடுகள் தொடர்ந்து கத்திக் கொண்டே இருப்பதால் தொந்தரவாக இருப்பதாக கூறி தங்களுடைய போராட்டத்தை இழிவு படுத்த வேண்டும் என காவல்துறை இதுபோன்று ஆட்டு மந்தை உள்ள பகுதியில் எங்களை அடைத்து வைத்திருப்பதாக கூறி காவல்துறையினருக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பி மண்டபத்திற்குள்ளே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதனால் காவல்துறையினருக்கும் பாஜக மகளிரணி நிர்வாகிகளுக்கும் இடையே சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது

இதனைத் தொடர்ந்து ஆட்டு மந்தையில் பாஜக மகளிர் அணி நிர்வாகிகளை அடைத்து வைத்ததாக கூறி போராட்டத்தில் ஈடுபட்ட பாஜக நிர்வாகிகளையும் காவல்துறையினர் கைது செய்து அழைத்துச் சென்றனர்

பின்னர் சிறிது நேரத்திலேயே மகளிரணி நிர்வாகி குஷ்பு மற்றும் மாநில மகளிர் அணி தலைவர் உமாரதி ஆகியோர் அடைத்து வைக்கப்பட்டுள்ள மண்டபத்திற்கு 300க்கும் மேற்பட்ட செம்மறி ஆடுகள் அழைத்துவரப்பட்டு அதே மண்டபத்தில் உள்ள மந்தையில் மீண்டும் அடைக்கப்பட்டது

அப்போது மண்டபத்தின் முன்பாக கூடியிருந்த பாஜகவினருக்கும் ஆட்டுமந்தையில் உள்ளவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது

இதனையடுத்து பாஜக நிர்வாகிகள் ஆடுகளை உள்ளே அழைத்துச் செல்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து முழக்கமிட்ட சிறிது நேரத்தில் மீண்டும் 300க்கும் மேற்பட்ட ஆடுகள் பாஜக மகளிரணி நிர்வாகிகள் அடைத்து வைக்கப்பட்ட மண்டபத்தின் உள்ளே அமைக்கப்பட்டிருந்த மந்தைக்கு அழைத்துச் செல்லப்பட்டன

ஒரே நேரத்தில் 300க்கும் மேற்பட்ட ஆடுகள் அனைத்துவரப்பட்டு மண்டபம் அமைந்துள்ள மந்தைக்குள் கொண்டு சென்ற நிலையில் சிம்மக்கல் பகுதியில் உள்ள ஓர்க்ஷாப் சாலை முழுவதிலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

## உலகப்புகழ் அலங்காநல்லூர், பாலமேடு ஜல்லிக்கட்டு மூர்த்தக்கால் நடும் விழா துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைப்பதாக அமைச்சர் பேட்டி

அலங்காநல்லூர், ஜன.04

உலகப்புகழ் அலங்காநல்லூர், பாலமேடு, ஜல்லிக்கட்டு விழா 15ஆம் தேதியும், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா 16ம் தேதியும் அரசு வழிகாட்டுதல் படி நடைபெற உள்ளது. இதையொட்டி அலங்காநல்லூர் வாடிவாசல் அருகே உள்ள முத்தாலம்மன் கோவில் முன்பாக முகூர்த்தகால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட கலெக்டர் சங்கீதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், பயிற்சி கலெக்டர் வைஷ்ணவிபால், எம்எல்ஏ வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மற்றும் அரசு அலுவலர்கள், விழாகுழுவினர், கிராம பொதுமக்கள் முன்னிலையில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்து கால்கோள் நடும் நிகழ்வு நடந்தது. இதேபோன்று பாலமேடு மஞ்சமலை ஆற்றுத்திடல் வாடிவாசலில்





முகூர்த்தக்கால் நடும் நிகழ்வு அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி செயல் அலுவலர்கள் ஜெயலட்சுமி, சசிகலா, திமுக அவை தலைவர் பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், பொதுக்குழு உறுப்பினர் முத்தையன், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா குழு தலைவர் ரகுபதி, பாலமேடு கிராம பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல், செயலாளர் பிரபு, பொருளாளர் கார்த்திக், மற்றும் ஜல்லிக்கட்டு விழா குழுவினர் மடத்து கமிட்டி நிர்வாகிகள், பேரூராட்சி தலைவர்கள் சுமதி பாண்டியராஜன், ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், துணை தலைவர்கள் ராமராஜ், சுவாமிநாதன், யூனியன் ஆணையாளர் வள்ளி, கலைச்செல்வி, மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இதைத்தொடர்ந்து அமைச்சர் பி.மூர்த்தி பத்திரிகையாளர்களிடம் அளித்த பேட்டியில் கூறியதாவது.

வழக்கத்தை போலவே இந்த ஆண்டும் உலகப்புகழ் பாலமேடு ஜல்லிக்கட்டு வருகின்ற 15ஆம் தேதியும், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா 16ம் மற்றும் தேதியும் அரசு வழிகாட்டுதல் படி சீரும் சிறப்புமாக நடைபெற உள்ளது. சென்ற ஆண்டை போலவே இந்த ஆண்டும் ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் அனைத்து காளைகளுக்கும் பரிசு பொருட்கள் வழங்கப்படுகிறது. அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று தொடங்கி வைக்க உள்ளார். அரசின் வழிகாட்டுதல்படி அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு உட்பட்டு ஜல்லிக்கட்டு போட்டியில் சுமார் 900 காளைகள் வரை அவிழ்த்து விட திட்டமிடபட்டுள்ளது. ஜல்லிக்கட்டில் சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் மாடுபிடி வீரர்கள் ஆன்லைன்மூலம் பதிவு செய்து பங்கேற்க லாம். காளைகளுக்கும் தற் போது மருத்துவ பரிசோதனை தொடங்கப்பட உள்ளது. தகுதி பெறும் காளைகள் இந்த ஜல்லிக்கட்டில் பங்கேற்கலாம். அரசு சார்பில் நடத்தப்படுகிறது. பரிசு பொருட்கள் அனைத்தும் விளம்பரதாரர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் மூலம் பெறப்பட்டு வழக்கம் போலவே சிறப்பான பரிசுகள் வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் ஒப்பந்த பணியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல் ஜன.4

திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் முன்மாதிரி மாவட்ட அளவிலான கூட்டமைப்புகளுக்கு (MBLFs) 1 மாவட்ட வள பயிற்றுநரை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த பணியாளராக பணி அமர்வு செய்திட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தேர்வு செய்யப்படும் மாவட்ட வள பயிற்றுநருக்கு மாதாந்திர ஊதியம் ஏதும் வழங்கப்படாது. தனியர் மாதம் ஒன்றிற்கு அதிகபட்சமாக 18 நாட்கள் பயிற்சி பணி மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு பயிற்சி பணி மேற்கொள்ளும் நாட்களுக்கு நாள் ஒன்றிற்கு மதிப் பூதியமாக ரூ.1, 250 மற்றும் பயிற்றுநர்களின் பயிற்சியில் தனியர் கலந்துகொண்டிருந்தால் நாள் ஒன்றிற்கு ரூ.625 மதிப்பூதியமாக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கத்தில் நேரடியாகவும், www.dindigul.nic.in என்ற வலைதள முகவரியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திண்டுக்கல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்க அலுவலகத்திற்கு 10.01.2025ம் தேதி மாலை 05.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

## வஉசி கலை மற்றும் அறிவியல் கல்லூரி பொறுநை இலக்கியத் திருவிழா



தூத்துக்குடி, ஜன.4

தூத்துக்குடி மாவட்டம் வ உ சி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலக இயக்கம் இணைந்து நடத்தும் பொறுநை இலக்கியத் திருவிழா 2025 னை மாவட்ட ஆட்சியர் தலைவர் இளம் பகவத் அவர்கள் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமத்துறை அமைச்சர் கீதா ஜீவன் தொடங்கி வைத்து விழாப்பேருறையாற்றினார்.

இவ்விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினர் ஜீவி மார்க்கண்டேயன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் மதுபாலன் மாவட்ட வன அலுவலர் ரேவதி ராமன் மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன் தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் பிரபு துணை ஆட்சியர் சத்யா முதன்மை நூலகர் மற்றும் தலைவர் அலுவலர் முனைவர் காமாட்சி எழுத்தாளர்கள் படைப்பாளர்கள் பேச்சாளர்கள் பேராசிரியர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவியர் பலர் கலந்து கொண்டனர்.

## நந்திவரம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க அடிக்கல் நாட்டிய எம்எல்ஏ

கூடுவாஞ்சேரி, ஜன.4

நந்திவரம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க செங்கல் பட்டு தொகுதி எம்எல்ஏ அடிக்கல் நாட்டினார்.

செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் ரூ..15 லட்சம் மதிப்பீட்டில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க செங்கல் பட்டு தொகுதி எம்எல்ஏ அடிக்கல் நாட்டினார். செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி நெல்லிக்குப்பம் சாலை ஓரத்தில் நந்திவரம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி உள்ளது. இங்கு 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

இதில் மாணவர்களின் வருகையை ஏற்று செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 லட்சம் நிதி ஒதுக்கி கூடைப்பந்து விளையாட்டு



மைதானம் அமைக்க பூமி பூஜை பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நந்திவரம் கூடுவாஞ்சேரி திமுக நகர மன்ற தலைவர் எம்.கே.டி.கார்த்திக்தண்டபாணி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் வக்கீல் ஜி.கே.லோகநாதன், நகராட்சி ஆணையர் ராணி, பள்ளி தலைமை ஆசிரியர் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாட்டு நலப்பணி திட்ட மாநில தொடர்பு அலுவலர் தயாளன் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன் கலந்துகொண்டு ரூ.15 லட்சம் நிதியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க பூமி பூஜை போட்டு அடிக்கல் நாட்டி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் வார்டு கவுன்சிலர்கள் ஜெயந்திஜெகன், ரவி, சதீஷ்குமார், நக்கீரன், டில்லி, ஸ்ரீமதிராஜி, சசிகலா செந்தில், நகராட்சி பொறியாளர் வெங்கடேசன், சுகாதார ஆய்வாளர் காளிதாஸ் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161